www.Padasalai.Net www.TrbTnpsc.com

# முதல் பருவ பொது தொகுத்தறித் தேர்வு – 2024

## ஆறாம் வகுப்பு

## தமிழ்

நேரம்: 2.00 மணி மதிப்பெண்கள்:60

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 6x1=

1. அமுதென்று என்ற சொல்லைப் பிரித்து எழுத கிடைப்பது ________
அ) அமுது + என்று ஆ) அமுது + தென்று இ) அமுது + ஒன்று ஈ) அமு+தென்று

2. ஏற்றத்தாழ்வு அற்ற ________ அமைய வேண்டும்.
அ) நாடு ஆ) சமூகம் இ) வீடு ஈ) தெரு

3. சிட்டுக் குருவி வாழ முடியாத பகுதி ________
அ) துருவப் பகுதி ஆ) இமயமலை இ) இந்தியா ஈ) தமிழ் நாடு

4. நீலம் + வான் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________
அ) நீலம்வான் ஆ) நீளம்வான் இ) நீலவான் ஈ) நீலவாணன்

ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக:

5. 'சோபியா' ரோபோவுக்குக் குடியுரிமை வழங்கிய நாடு ________
6. இந்தியாவின் பறவை மனிதர் ________

இ) எதிர்ச்சொற்களைப் பொருத்துக: 4x1

| | | | |
|---|---|---|---|
| 7. | அணுகு | – | தெளிவு |
| 8. | ஐயம் | – | சோர்வு |
| 9. | ஊக்கம் | – | பொய்மை |
| 10. | உண்மை | – | விலகு |

ஈ) ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி: 5x2=

11. பாரதிதாசன் தமிழுக்கு சூட்டியுள்ள பெயர்கள் யாவை?
12. செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?
13. காணி நிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?
14. உயிருள்ள உடல் எது?
15. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?
16. நாளைய மனிதன் வாழ்வு எவ்வாறு இருக்கும்?
17. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

உ) ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி: 3x4=

18. சிட்டுக்குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக?
19. அஃறிணை, பாகற்காய் ஆகிய சொற்களின் பொருள் சிறப்பு யாது?
20. எந்திர மனிதனின் பயன்களை விளக்குக.

Padasalai.Net
Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

21. விளைவுக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?
22. தமிழ்மொழியின் சிறப்பைக் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.

ஊ) பின்வரும் கவிதைப் பகுதியை அடிபிறழாமல் எழுதுக 4+2=6

23. "இனிய உளவாக" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
24. "தமிழுக்கும்" எனத் தொடங்கி "நிருமித்த ஊர்" என முடியும் இன்பத்தமிழ் பாடலை எழுதுக.

எ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி 8x1=

25. இலக்கணம் – இச்சொல்லுக்கு உரிய மாத்திரை அளவைக் கண்டுபிடி.
26. பொருத்தமான சொல்லால் கட்டங்களை நிரப்புக.
பறவைகள் இடம் பெயர்தல்

| வ | | | | | |
|---|---|---|---|---|---|

27. முத்து தம் ________ காரணமாக ஊருக்குச் சென்றார். (பணி / பனி)
28. தொடரில் அமைத்து எழுதுக நாள்தோறும்
29. வரிசை மாறியுள்ள சொற்களை முறைப்படுத்தி எழுதுக.
மனிதன் உலகில் இல்லாத பறவை வாழ முடியாது.
30. அடிக்கோடிட்ட சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லினை எழுதுக.
<u>கம்ப்யூட்டர்</u> துறையில் உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.
31. கலைந்துள்ள எழுத்துக்களை முறைப்படுத்துக
மத்ருதும்வ

| ம | | | | | |
|---|---|---|---|---|---|

32. பிறமொழிக் கலப்பின்றி தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்தி எழுதுக.
எங்க ஸ்கூல்லே வாட்டர் வசதி உண்டு.

ஏ) என் பொறுப்புகள் 1x2

33. தாய்மொழியை காக்க நீ என்ன செய்வாய்?

ஐ) ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி 1x6

34. அ) கிழவனும் கடலும் என்னும் படக்கதையை உங்கள் சொந்த நடையில் கதையாக எழுதுக.

(அல்லது)

ஆ) டாக்டர் அப்துல்கலாம் அவர்களுடன் மாணவர்கள் உரையாடிய உரையாடலை கட்டுரை வடிவில் எழுதுக.

ஒ) ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி 1x6=

35. அ) விடுப்பு விண்ணப்பம்

(அல்லது)

ஆ) இயற்கையை காப்போம் என்ற தலைப்பில் ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக?

•••/•••

Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com